**கொத்மலை பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கொத்மலை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொத்மலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைபழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுக்கான கிடைத்த விளம்பர பதாதை வருமானம் ரூபா 134,650 மற்றும் பெறவேண்டிய விளம்பர பதாகை வருமானம் 490,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 இன் கணக்கில் சீராக்குவதாக | வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டுக்குரிய கடன் கொடுத்தோரின் கீழ் மிகை ஒதுக்கீடு ரூபா 221,821 தொகையை திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்படாமல் செலவினம் வரவு வைக்கப்பட்டிருந்தது. | கணக்கின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டின் போது 2019 ஆம் ஆண்டுக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட கணக்காய்வு கட்டணங்கள் ரூபா 162,000 அவ்வாண்டின் செலவினமாக சீராக்கப்பட வேண்டிய தவறினை சரி செய்வதற்காக மீளாய்வாண்டில் 16 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் வருமான செலவின கணக்கிற்கும் திரண்ட நிதியத்திற்கும் சீராக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் செலவினம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டது. | கணக்கின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டுக்குரிய கணக்காய்வு கட்டணங்கள் ரூபா 168,000 மற்றும் மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு கட்டணங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 169,120 செலவினம் கடன் கொடுத்தோர் குறைவாகவும் ரூபா 112,986 ஆன 02 கடன்கொடுத்தோர் மீதிகள் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டு இருந்தன. | 2023 கணக்குகளை தயாரிக்கும் போது அத்தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படும் 07 கணக்குகளுக்குரிய ஆரம்ப புத்தகங்கள் /பயன்பாட்டு ஆவணங்களின் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 7,070,811 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | 2023 கணக்குகளை தயாரிக்கும் போது அத்தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,241,843 பெறுமதியான 04 கணக்கு மீதி அட்டவணைகள் சமர்ப்பிக்கப் படாமையால் கணக்காயின் போது திருப்திகரமாக திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | 2023 கணக்குகளை தயாரிக்கும் போது அத்தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் இணக்கமிண்மை சீராக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம்<br>------------------------------------------------<br>நி.பி 571(3) | 2019 ஜூலை 01 ஆம் திகதி முதல் 2020 நவம்பர் 19 ஆம் திதி வரை 9 சந்தர்ப்பங்களுக்குரிய நிர்மாணங்களில் பிடிகாசு ரூபா 135,776 தொகை விடுவிக்கப்பட்டிருக்க வில்லை | கொடுப்பனவு செய்யக்கூடிய பிடிகாசினை விடுவிப்பதற்கும் எஞ்சியவற்றை வருமானத்துக்கு செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,496,669 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 24,789,319 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 11,725,500 | 9,716,533 | 9,546,462 | 4,253,680 | 11,836,500 | 11,038,336 | 9,549,193 | 4,083,609 |
| (ii) | வாடகை | 7,532,800 | 1,509,818 | 1,194,568 | 3,045,960 | 6,591,000 | 6,946,901 | 5,727,478 | 2,730,710 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 11,291,000 | 10,649,464 | 10,649,464 | - | 14,642,000 | 2,238,584 | 8,902,644 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 81,555,000 | 15,294,335 | 16,537,508 | 6,584,270 | 77,928,500 | - | 81,345,847 | 7,827,443 |
| | | 112,104,300 | 37,170,150 | 37,928,002 | 13,883,910 | 110,998,000 | 20,223,821 | 105,525,162 | 14,641,762 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| மீளாய்வாண்டின் இறுதி தினத்தில் உள்ளவாறு 4,472,458 ஆன நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன் நிலுவையில் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட 1511 வீதவரி வளவுகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபாய் 1,739,976 ஆன மீதியொன்றும் 05 ஆண்டுகளுக்கும் | 2023 ஆம் ஆண்டில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்பட்ட 258 வீத வரி அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 549,504 ஆன மீதி ஒன்றும் காணப்பட்டது. | | |
| (ஆ) | ஏனைய வருமானம் | | |
| i | மீளாய்வாண்டின் ஜனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,711,510 ஆன முச்சக்கர வண்டி வாடகை நிலுவையில் இருந்து அறவீடுகள் ரூபா 710,000 அதாவது 26 சதவீதமாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை பட்டியலிடல் ரூபா 1,475,900 இல ரூபர் 424,300 அதாவது 29 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவையாக காணப்படும் பணத்தை நீதிமன்றத்திற்கு அறிக்கையிட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| ii | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர் கட்டண நிலுவை ரூபா 526,150 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டில் பட்டியலிடப்பட்ட கட்டணங்களில் ரூபா 354,295 அறவிடப்பட்டிருக்கவில்லை மீளாய்வாண்டின் இறுதி திகதியில் காணப்பட்ட ரூபா 869,425 ஆன நிலுவை மீதியில் 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலமாக 86 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 486,400 ஆன மீது ஒன்றும் 05 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக 31 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபாய் 161,645 ஆன மீதியொன்றும் நிலுவையாக காணப்பட்டது. | மேலும் அறவிடுவதற்குள்ள நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 947,740 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 5,636,800 ஆக இருந்தது. . | எதிர்காலத்தில் அறவீடு செய்வதாக | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 85 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள 04 பொது மலசலகூடங்க்ள பராமரிக்கப்படாமல் அழிவடைவதற்கு இடம் அளிக்கப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகள் பின்பற்ற வேண்டும் |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 108 (ஈ)பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் கொத்தமல புதிய நகரின் வாரச்சந்தை காணி மற்றும் கட்டிடங்கள் பயன்படுத்தப்படாமலும் என்று பராமரிப்பு இன்றியும் அழிவடைவதற்கு இடம் அளிக்கப்பட்டிருந்தது | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகள் பின்பற்ற வேண்டும் |
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் III ஆம் பிரிவின் 27 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் வீதி பதிவேடு ஒன்று காணப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஈ) | தனியார் செயற்திட்டமொன்றின் மூலம் மல்தெனிய மற்றும் பூண்டுலோயா ஆகிய இரண்டு நூலகங்களுக்காக கற்றல் நிலையம் ஒன்றை பேணி செல்வதற்கு தேவையான எழுது கருவிகள் மடிக் கணனிகள் மல்டிமீடியா, நிழற்பட பிரதி இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் நன்கொடையாக 2022 ஜனவரி 08 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் குறித்த செயல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை | 2023 ஜுன் மாதம் முதல் தகவல்கள் வழங்கல் நிலையத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | குறித்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும் |
| (உ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 பிரகாரம் வீதிகளில் இருக்கும் அனைத்து கழிவுகள், வீடுகளில் இருக்கும் கழிவுகள் மற்றும் மலங்களை வெளியேற்று வதற்காக தமது பிரதேசத்தில் முடியுமானவரை அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது சபையின் செயற்பாடாக இருந்த | பிரதேசத்தின் பொதுமக்களின் எதிர்ப்பினால் கடந்த காலங்களில் தொடர்ந்தும் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு முடியாதிருந்ததாக | பொதுமக்களின் ஆக்கபூர்வமான செயற்பாட்டுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் |

போதிலும் கொத்மலை புதிய நகரின் திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவ நிலையம் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் அழிவடைவதற்கு இடம் அளிக்கப்பட்டிருந்தது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் காலப்பகுதிக்குரிய ரூபா 58,610,536 ஆன 87 கடன் மீதிகள் தீர்வு செய்வதற்கும் ரூபா 9,690,235 ஆன 246 கடன் கொடுத்தோர் மீதிகளை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 07 மயான பூமிகளின் எல்லைகள் குறியிடப்படாதிருந்ததுடன் அடக்க நடவடிக்கைகளுக்காக சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்கள் முறையாக பராமரித்து பாதுகாப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) நூலக கட்டிடங்கள் கடைகள் மற்றும் சபையின் வீடுகள் உட்பட 14 கட்டிடங்கள் பராமரிப்பின்றி அழிவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுவதாக | சொத்துக்களை முறையாக பராமரித்து பாதுகாப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட பெறுமதி இனங்காண பல முடியாத 07 இயந்திர உபரணங்கள் மற்றும் 04 அலுவலக உபகரணங்கள் மற்றும் 02 வாகனங்கள் என்பன 01 ஆண்டு முதல் 20 ஆண்டுகாலம் வரை விளைவற்றும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | பிணியாளர் வண்டிகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் கணினி இயந்திரங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை பயன்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | திருத்தி அமைக்கப்பட்டு பயன்பாட்டுக்கு எடுக்கப்பட வேண்டும் |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபைகள் (நிதி நிர்வாக) விதிகள் 177, 178,(5) இன் பிரகாரம் கேள்வி கோரலின்றி அல்லது 178(3) மற்றும் 178 (3)(2) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் அதற்கு முரணாக நடவடிக்கை எடுத்து திறந்த கேள்வி நடைமுறை இருந்து விலகும் நோக்கில் ரூபா 12,000,000 ஆன மொத்த கிரய மதிப்பீட்டு பெறுமதியுடன் கூடிய பேருந்து நிறுத்துமிட நிலைய நிர்மாண வேலையின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 2,000,000 வீதம் 6 மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 04 சங்கங்களுக்கு நிர்மாணம் கையளிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை ரூபா 10,047,150 கொடுப்பளவு செய்யப்பட்டிருந்தது | இந்நிறுவனம் 2021 முதல் 2022 திசெம்பர் வரை 06 கட்டங்களின் கீழ் செயற்படுத்தப் பட்டிருந்ததாக | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 11 பதவிகளில் 20 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் 02 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் 02 தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டமை சபையின் நிர்மாண வேலைகள் அத்துமீறிய நிர்மாண பரிசோதனை நடவடிக்கைகளை நிறைவேற்றும் போது தடையொன்று காணப்பட்டது.. | வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினதும் அமைச்சின் பிரதான செயலாளர் அவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக | வெற்றிடங்களின் நிரப்புவபதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

# 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கை திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த செயற்பாடுகள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றும் மட்டம் எண்ணிக்கை ரீதியாக செயலாற்றல் அறிக்கையில் காண்பிக்கப்பட்டு இருக்கவில்லை | 2023 செயல் நடவடிக்கை திட்டத்தில் குறித்த இலக்குகளை நிறைவேற்றும் மட்டத்தை எண்ணிக்கை ரீதியாக சமர்ப்பிப்பதாக | செயல் நடவடிக்கைத் திட்டம் முறையாக தயாரிக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 04 பிரதான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டின் போது செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 06 வருமான விடயங்களில் 12 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையிலும் 07 செலவின விடயங்களில் 07 சதவீதம் முதல் 49 சதவீதம் வரையான விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | காணப்பட்ட கொரோனா தொற்று நிலைமையில் காணப்பட்ட பொருளாதார பின்னணியில் எரிபொருள் விலை அதிகரிப்பு போன்ற ஒட்டுமொத்த பொருளாதார நிலைமையும் காரணமாக காரணமாக விலகல் ஏற்பட்டுள்ளதாக | தேவைப்பாட்டை கருத்துக் கொண்டு கவனமாகவும் முறையாகவும் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |

**4.3 சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார பிரதேசத்தில் நாளொன்றிற்கு 3.5 தொன் அளவிலான கழிவுகள் சேகரிக்கப்படுவதுடன் அக்கழிவுகள் முகாமைத்துவம் இன்றி ஹபுகஸ்தலாவ பிரதேசத்தில் குழி ஒன்றில் இடப்பட்டு வந்தது. ஹரோவத்த கழிவு மீள் சுழற்சி நிலையத்தில் கழிவுகள் தீயிடப்பட்டு இருந்ததால் அதிகளவிலான சுற்றாடல் பாதிப்பு ஒன்று இடம்பெற்று வந்தது. உக்கும் கழிவுகளில் இருந்து சேதனப் பசளை உற்பத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | உக்காத கழிவுகளை சேகரிக்கும் வாகனங்களுக்கு அதிக அளவில் கழிவு பொருள் சேறுதல் மற்றும் நாட்டில் காணப்பட்ட எரிபொருள் சிக்கல்கள் காரணமாக இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக | திண்ம கழிவுப்பொருள் முகாமை செய்யப்பட வேண்டும் |

**4.4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டுக்காக சபையினால் 2017 இன் 19 ஆம் இலக்க நிலையான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டுக்காக இலக்குகளை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தின் ஒழுங்குகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |